DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 81/2021

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகையசாமி | Father's/Husband's Name : | வெங்கிடசாமி |
| Village | : ரெங்சமுத்திரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 84 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேே. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எங்கள் இடத்தை அவரின் இடம் என்று சொல்கிறார். சுப்பா நாயுடு வகையறாவிற்கு அவருடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கு தாவா சொத்து சம்பந்தமாமக எதுவும் பிரச்சனை இருக்கிறதா என்றால் இல்லை. சுப்பாநாயுடுவின் 2 மனைி வமற்றும் மக்களுக்கிடையேயும் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை இல்லை. சுப்பாநாயுடுவின் சகோதர சகோதரிகள், வாரிசுகள் தாவா சொத்தில் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். சுப்பாநாயுடு மற்றும் அவரின் சகோதர சகோதரிகளுக்குள் முறையாக அவர்களின் சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்து கொண்டதால் தான் அவர்கள் யாரும் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான்.

2) அதனால் சுப்பாநாயுடுவின் சகோதர சகோதரிகள் மற்றும் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் மேற்படி நபர்களை தரப்பினரகளை சேர்க்க வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியும், 741. சர்வே எண்.741/5A க்காக வாதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். 19 செண்டுக்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். என்னுடன் பிறந்தவர்கள் முத்துச்சாமி, நாராயணசாமி ஆவார்கள். நாங்கள் 3 பேரும் தான் வெங்கடசாமியின் வாரிசுகள். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். எனது அப்பா பெயர் V.வெங்கடசாமி. தாத்தா பெயர் அ.வெங்கடசாமி.

பி.வா.சா.ஆ.1 ஆவணம் அழகர்சாமி நாயுடுவின் மகன் வெங்கடசாமிநாயுடு –1, மேற்படி வெங்கிடசாமி நாயுடுவின் மக்கள் வெங்கிடசாமி நாயுடு –2, மேற்படியாரின் தமையன் அழகர்சாமி நாயுடு –3 ஆகியோர் சேர்ந்து பெருமாள் நாயுடுவின் வெங்கிடசாமி நாயுடு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3) மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நபர்கள் யாரும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை அழகர்சாமி மகன் வெங்கிடசாமியும் அவருடைய இரண்டு மகன்களும் சேர்ந்து எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் அழகர்சாமி எனது அண்ணன். என் வழக்கில் அழகிருசாமி என்ற சகோதரர் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, என் உடன் பிறந்த அண்ணன். எனது நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பாராவில் வெங்கிடசாமி நாயக்கருக்கு நானும் முத்துசசாமி மற்றும் நாராயணசாமி ஆகியோர்கள் வாரிசு என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் அழகருசாமி எனது அண்ணன் என்ற விபரத்தை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4) என்னுடன் பிறந்தவர்கள் என்னோடு சேர்த்து 4 பேர். அவர்களின் பெயர் அழகருசாமி, முத்துச்சாமி, நாராயணசாமி. எனது நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள்சாமிக்கு பெயரளவில் எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் வடுகப்பட்டி செட்டியாருக்கு எழுதி கொடுத்திருக்கும் ஈடு பத்திர கணக்கை தீர்ப்பதற்காகவும், டி.மு.கோர்டில் டிகிரியாகி இருக்கும் டிகிரி கணக்கு தீர்ப்பதற்காகவும் எழுதி கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1935 ல் செட்டியாருக்கு பணத்தை செலுத்தி விட்டு மறு கிரையம் எழுதி வாங்கினோம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்தை (சர்வே எண்.741/5A) கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், இந்த ஆவணத்தில் காட்டவில்லை. தாவா சொத்து சம்பந்தமில்லாத பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என்பதை காட்ட தாக்கல் செய்தோம்.

5) பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பெருமாள்சாமிநாயுடு மகன் வெங்கிடசாமி மற்றும் வெங்கிடசாமியின் மகன் வெங்கிடசாமி நாயுடு ஆகியோர் மட்டும் தான் தரப்பினராக இருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 4 ம்

பக்கத்தில் 8 வது பாராவில் பெருமாள்நாயுடுவின் மகன் வெங்கிடசாடமி நாயுடு, அழகருசாமி மகன் வெங்கிடசாமி நாயுடுவும் மறுகிரைய ஒப்பந்தம் எழுதி கொண்டனர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்திற்கும் பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்திற்கும் முரண்பாடுகள் இருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 6 வருடம் 8 மாதத்திற்குள் மறு கிரையம் செய்து கொள்ள வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலக்கெடுவிற்குள் ரூ.450/– கொடுத்து முடிக்கவில்லை என்றால் பெருமாள்சாமி நாயுடுவிற்கு அந்த சொத்துக்கள் சொந்தமாகிவிடும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், நாங்கள் பணத்தை செலுத்தி மீட்டுவிட்டோம்.

6) எந்த ஆண்டு பணத்தை செலுத்தி சொத்துக்களை மறு கிரையம் வாங்கினோம் என்றால் 1935 ம் ஆண்டு வாங்கினோம், அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்திலும் சர்வே எண்.741/5A ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் பொறுத்து எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தின்படி தாவா சொத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் தாவா சொத்தை பற்றி சொல்லப்படவில்லை என்பதால் அந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர்களுக்குள் 1985 ம் ஆண்டு பாகம் பிரித்து கொண்டதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

7) தாவா சொத்து எந்த காலத்திலும் எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் தாவா சொத்து சம்பந்தப்பட்ட முன் பாத்தியஸ்தர்கள் விபரங்களை முன்னுக்கு முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு வாதியின் தகப்பனார் பெயரில் தான் இன்று வரை இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 1920 ம் ஆண்டிலேயே வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாதியின் தாத்தா கோபால்சாமி நாயக்கர் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும் எங்களது உரிமை மற்றும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.12 06:17:11 +0530

District Munsif,

Aundipatti.